Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஸ்ரீ ஐப்பசி மீ 09 உ வெள்ளிக்கிழமை (26 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 06 கதிர்: 233

# போர் நிதி திரட்ட அரசு படாதபாடு!

## யுத்த உறுதி நோட்டுகள் விற்பனை

கொழும்பு, அக். 26

யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு நிதிவளத்தைப் பெறுவது எப்படி என்று அரசாங்கம் திண்டாடுவதாக நிதித்துறை வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

இதனால் வங்கி அல்லாத வேறு துறைகளிடம் இருந்து பணத்தைப் பெறுவதற்கு அரசு பலவித முயற்சிகளைச் செய்து வருகிறது.

யுத்த உறுதி நோட்டுக்களை (War Bonds) பணச் சந்தையில் விற்பதன் மூலம் யுத்தத்துக்குத் தேவையான பணத்தைப் பெறும் நடைமுறையை அரசு கையாண்டு வருகிறது.

இந்த வகையில் கடந்த ஜூன் மாதத்தில் யுத்தம் தொடங்கிய பின்னர் யுத்த உறுதி நோட்டுகளை விற்று ஏற்கனவே 200 கோடி ரூபாவைப் பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து மேலும் 300 கோடி ரூபாவைத் திரட்டும் பொருட்டு கடந்த 17 ஆம் திகதி யுத்த உறுதி நோட்டுகளைச் சந்தையில் விட்டது.

அரசாங்கத்தின் யுத்தச் செலவுகள் அதிகரித்துள்ளதாலேயே, அது பணத்தைக் கண்டுபிடிக்கப் படாதபாடுபடுவதாக நிதித்துறை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இவ்வருடத்தில் பாதுகாப்புச் செலவு ஆயிரம் கோடி ரூபாவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது ஆனால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 7 சிப்பாய்கள் பலி!

கொழும்பு, அக் 26

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று விடுதலைப் புலிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதல் ஒன்றில் ஸ்ரீலங்காப் படைச் சிப்பாய்கள் ஏழுபேர் கொல்லப்பட்டார்கள் வேறு இரண்டு படையினர் காயமடைந்தனர்.

கொழும்பில் கூட்டுப்படை தலைமை அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

(உ-எ)

## ஈழத் தமிழர் பிரச்சினையில் ஆஸி. தீவிர ஈடுபாடு

கொழும்பு, அக். 26

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் ஆஸ்திரேலிய அரசு தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக இலங்கை அரசுக்கும் ஆஸ்திரேலியப் பிரதமர் பொப் ஹோக்குக்கும் இடையே மூன்று கடிதங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

வடக்கு — கிழக்கு நெருக்கடிக்கு பொதுநலவாய (கொமன்வெல்த்) அமைப்பு மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்று ஆஸ்திரேலிய பிரதமர் யோசனை தெரிவித்திருந்தது தெரிந்ததே.

இதேவேளை மத்தியஸ்தம் என்ற பெயரில் வல்லரசு நாடு ஒன்று இன நெருக்கடியில் தலையிடக்கூடும் என்ற அச்சம் இலங்கை அரசு வட்டாரங்களில் நிலவுவதாகக் கூறப்படுகிறது.

இதே சமயம் இலங்கை விவகாரங்களில் வேறு நாடுகள் தன்னைவிடச் செல்வாக்குப் பெற்றுவிடுமோ என்ற அச்சத்துடன் இந்தியாவும் நிலைமைகளை அவதானித்து வருவதாகத் தெரியவருகிறது. (ஒ-எ)

## யாழ். போதனா ஆஸ்பத்திரியில் திருத்த வேலைகள் முடிவடைந்தன

யாழ்ப்பாணம், அக். 26

யாழ். போதனா ஆஸ்பத்திரி முக்கிய திருத்த வேலைகள் பூர்த்தியாகிவிட்டன.

அதனைத் தொடர்ந்து அது எந்த நேரமும் இயங்கத் தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சேதமடைந்திருந்த சத்திர சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் பிரிவுகள், பல வார்ட்டுகள் என்பன திருத்தப்பட்டு விட்டன.

கூரைக்குத் தேவையான சீற்றுகளும் நேற்று வந்து சேர்ந்தன.

எந்த நேரமும் ஆஸ்பத்திரியைத் திறக்கக் கூடிய வகையில் திருத்த வேலைகள் முடிவடைந்துவிட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆஸ்பத்திரியை மீண்டும் திறப்பது குறித்து நேற்றும் முக்கிய கலந்துரையாடல்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டமடுவில் நிலக்கண்ணி

யாழ்ப்பாணம், அக். 26

கடந்த வியாழனன்று அம்பாறை மாவட்டம், வட்டமடுவில் காலை 10 30 மணியளவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நிலக்கண்ணி வெடித் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து சிப்பாய்கள் மீது துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து விவரமான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

(உ)

## தங்கவேலாயுதபுரத்தில் இராணுவ வாகனம் சேதம்

அம்பாறை மாவட்டம் தங்கவேலாயுதபுரத்தில் கடந்த வெள்ளியன்று நண்பகல் 12 30 மணி முதல் இரண்டு மணிவரை விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் கடும் சண்டை நடைபெற்றது.

இந்தச்சண்டையில் இராணுவத்தினரின் வாகனம் ஒன்று சேதமாக்கப்பட்டது என்றும்–

இராணுவத்தினரின் சேத விவரங்கள் குறித்து மேலதிக தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ)

## பீரங்கித்தாக்கு

தென்மராட்சி, அக். 26

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

எழுதுமட்டுவாழ் கழிக்கரைப் பகுதியில் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன. (இ-117)

## கடற்கண்ணித் தாக்குதல்

செம்பியன்பற்று கடற்பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் கடற்கண்ணிவெடியில் சிக்கி கடற்படையினரின் பீரங்கிப் படகு ஒன்று சிதைவுற்றதாக தகவல் ஒன்று நேற்று நண்பகல் வெளியானது.

ஆனால் நள்ளிரவு இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை மேற்படி சம்பவம் தொடர்பாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல் எதனையும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து பெற்றுக்கொள்ளமுடியவில்லை. (உ)

## அகதி முகாம்களுக்கு மருந்து

அகதி முகாம்களில் பயன்படுத்துவதற்கென அத்தியாவசியமான மருந்து வகைகள் பிரிட்டனின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவுகளில் நடக்கும் தாய்-சேய் நல சேவைக்கும் பிரஸ்தாப நிதியம் மருந்து வகைகளை அனுப்பி வைத்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் அனுப்பி வைத்த மருந்து வகைகள், 'சிகிரியா'' கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, நேற்று பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, 'சிகிரியா' கப்பலில் யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான சில மருந்து வகைகளும், 5 600 விட்டாமில்க் பைக்கட்டுகளும் கொண்டுவரப்பட்டன. (அ-15)

## அத்தியாவசிய சேவைகள் மந்தமடையும் ஆபத்து!

### எழுத்தில் போடுமாறு கேட்கிறார்கள்

யாழ்ப்பாணம், அக். 26

யாழ்ப்பாண மாவட்டத்தின் அத்தியாவசிய சேவைகள் சம்பந்தமான தேவைகளை, எழுத்துமூலம் அனுப்புமாறும், அப்போதுதான் அவை சம்பந்தமாக நடவடிக்கைஎடுக்கமுடியும் என்றும் கொழும்பு அதிகாரிகள் நிபந்தனை விதித்துள்ளார்கள் — சட்டாயப்படுத்தி உள்ளார்கள்.

தபாற்சேவை ஒழுங்கில்லாத இவ்வேளையில், கொழும்பு அதிகாரிகள் 'எழுத்தில் போடுமாறு' கட்டாயப்படுத்தி இருப்பதால் இக்குடாநாட்டின் அத்தியாவசிய சேவை பாதிக்கப்பட்டிருக்கிறது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் பொது தேர்தலில் பெனாஸிரின் கட்சி தோல்வி!

இஸ்லாமாபாத், அக். 26

பாகிஸ்தான் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி தோல்வியடைந்தது.

இஸ்லாமிய ஜனநாயக அணி அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தானின் தற்போதைய காபந்து அரசின் ஆதரவைப் பெற்ற நவாப் ஷரீப் தலைமையிலான இஸ்லாமிய ஜனநாயக அணி பாகிஸ்தானில் புதிய அரசாங்கத்தை அமைக்கும்.

இந்தத் தேர்தலில் தமது கட்சி தோல்வி அடைந்ததை பெனாஸிர் பூட்டோ ஒப்புக்கொண்டார். தோல்விக்குக் காரணம் தேர்தலில் பெருமளவு மோசடி நடைபெற்றதே என்றார்.

இரண்டு தொகுதிகளில் போட்டியிட்ட பெனாஸிர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் வி. பி. சிங்கின் அரசு கவிழ்வது நிச்சயம்!

புதுடில்லி, அக். 26

நவம்பர் 7 ஆம் திகதி இந்திய நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் இடம்பெறும் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியுற்று வி. பி. சிங் அரசு கவிழ்வது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

அன்றைய கூட்டத்தில் இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் கலந்து கொண்டு வி. பி. சிங் அரசுக்கு எதிராக வாக்களிப்பர் என அக்கட்சி நேற்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

இந்தச் சிறப்புக் கூட்டத்தில் காங்கிரஸ் எம். பிக்கள் பங்குபற்றமாட்டார்கள் என

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கயிறு வகைகளைப் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளவும்; சித்திவிநாயகர் ஸ்ரோர்ஸ். 117, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம் (நாச்சிமார் கோவிலடி). (14561)

### உரம் விற்பனைக்கு உண்டு

வீ 1 சலவை உரம் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி எஸ் ரீ. கே. இந்திரன், ஆறுமுகம் ஒழுங்கை, 3 ஆம் கட்டை கல்வியங்காடு. நல்லூர். (14546)

### சேவை

தெளிவான போட்டோ கொப்பி றோனியோ தட்டச்சு, வேலைகளுக்கு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சண்முகம் றேட்ஸ் இல. 65 (185) பிரதான வீதி, யாழ்ப்பாணம். [14556]

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo Enterprises பிரதான வீதி, மானிப்பாய். Bank - Siva Studio அருகாமையில் (சி-5219)

### கிளீன் கட் போட்டோ ஸ்ரற்

தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும். அடையாள அட்டைகட்கு கவரிட்டு கொள்ளவும் கிளீன் கட் 37 சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி. யாழ்ப்பாணம் ராஜ் இந்து மகளிர் சந்திக்கு [illegible] 14523)

### இராவணன் கோட்டை

மீரா வெளியீடு சிறுவர்களுக்கு கதை மாயாஜால மந்திரதந்திர வீரதீரச் செயல்கள் நிறைந்தது துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, பிகபென்ஸ்(B) கிளிநொச்சி, லக்கி புத்தகசாலை பண்டத்தரிப்பு ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர (14502)

### தவறிவிட்டது

நா. ராஜன் 'டஷ்பவாசா' உதயசூரியன் வீதி உடுவில் சுன்னாகம் என்ற முகவரியை உடைய ஆசிரியர் நியமனக் கடிதமும் யா/சாவடி இ. த. க. பாடசாலையின் கடிதமும் நாச்சிமார் கோவிலுக்கும், நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது எடுத்தவர் கள் மேலுள்ள முகவரிக்கு ஒப்படைக்கவும். (14554)

அருணன் தங்கம்மா எனப் பெயரிடப்பட்ட கடனட்டை டிராப்ட்டும் இலங்கை வங்கிக் கணக்குப் புத்தகமும் சாவகச்சேரிக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் தவறிவிட்டது எடுத்தவர்கள் லிங்கம் றேடஸ், கொடிகாமம் அல்லது கோகிலா தேனீர் கடையிலோ கொடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். (14562)

### மீண்டும் நாவாந்துறையில்

யாழ்ப்பாணம், அக். 26

அண்மைய இராணுவ நடவடிக்கைகளால் ஆனைக் கோட்டையில் தற்காலிகமாக இயங்கி வந்த நாவாந்துறை முதலாம், இரண்டாம் இலக்க ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மீண்டும் நாவாந்துறையிலே செயற்பட ஆரம்பித்துள்ளன. (இ-6)





பள்ளிச் சிறார்களின் சீருடைகள் அலுவலகம் அணிந்து செல்லும் உடைகளின் அழுக்கினைப் போக்கி பளிச்சிடும் வண்ணத்தில் தருவது

## மில்க்வைற் சலவைப் பவுடர்

சலவைக்குச் சிக்கனமானது துரிதமானது.

50 கிறாம் தனிப்பைக்கற் ரூபா. 3/-
100 வெற்றுப் பைக்கற் பெற்றுத் தரும் அன்பளிப்பு அழகிய கைலேஞ்சி.
150, 450 கிறாம் அட்டைப் பெட்டிகளிலும் கிடைக்கிறது.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

(சி/5336)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:
1927 - 10 - 31

மறைவு:
1990 - 09 - 27

### திருமதி இராசம்மா கந்தசாமி

(இளைப்பாறிய ஆசிரியை)

துயர் மிகுந்த இவ்வேளையில் துணையாய் நின்ற அன்புள்ளங்கள், அனுதாபச் செய்திகளால் ஆறுதல் செய்தவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு 27 - 10 - 90 சனிக்கிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மா! உங்கள் ஆத்ம சாந்தியடைய அருள்மிகு சித்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்:
**கணவன், மகள், மருமகன் பேரப்பிள்ளைகள்,**

23, கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (சி-5331)

## அந்தியேட்டி அழைப்பும் வீட்டுக் கிருத்தியமும்



மலர்வு:
10 - 05 - 1922

உதிர்வு:
11 - 10 - 1990

### துரைச்சாமி செல்லம்மா

11 - 10 - 90 ல் சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் திருமதி செல்லம்மா துரைச்சாமி அவர்களின் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று 26-10-90 இல் எமது இல்லத்தில் நடைபெறும், அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

"துரை மகால்" [illegible]
புதிய செம்மணி [illegible]
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (14552)


## JAFFNA ENGLISH ACADEMY

28 - 10 - 90 முதல்

- ★ TOEFL,
- ★ ESOL (Lond), English for Speakers Of Other Languages
- ★ English for Business Communication EBC (Lond)
- ★ Spoken English

and

- ★ G. C. E. (Advanced Level) English

ஆகிய புதிய/பழைய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்

நேரில் தொடர்பு கொள்ளவும்:
9, றக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[சி-5330]



எமது ஸ்தாபனம்
காலை 9 மணி தொடக்கம்
மதியம் 1.00 மணிவரை திறந்திருக்கும்

## எமது புதிய வெளியீடுகள்

1. ரஜனியின் ★ அதிசயப் பிறவி
2. ராம்கியின் ★ இணைந்த கைகள்
3. விசுவின் ★ வரவு நல்ல உறவு
4. விஜயகாந்தின் ★ சிறையில் பூத்த சின்னமலர்
5. சத்தியராஜின் ★ மதுரை வீமன் எங்க சாமி
6. விஜயகாந்தின் ★ சந்தனக் காற்று
7. பார்த்திபனின் ★ தாலாட்டு பாடவா
8. விஜயகாந்தின் ★ எங்கிட்ட மோதாதே
9. சத்தியராஜின் ★ வேலை கிடைச்சிடுச்சு
10. கார்த்திக்கின் ★ கிழக்கு வாசல்
11. ரகுவரனின் ★ புரியாத புதிர்
12. ராமராஜனின் ★ தங்கத்தின் தங்கம்
13. கார்த்திக்கின் ★ கல்யாண ராசி
14. சிவகுமாரின் ★ நியாயங்கள் ஜெயிக்கட்டும்
15. ரேவதியின் ★ 48 மணி நேரம்
16. சீதாவின் ★ பொலீஸ் மனைவி

அனைத்தும் "ஒறிஜினல்" பிரதிகள்

## ★ வீடியோ விமல் ★

117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-5341]


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### ஜோசப் அலெக்சாண்டர்

பிறப்பு:
18 - 08 - 1940

இறப்பு:
26 - 10 - 1987

உறவே!
நாங்கள் தனித்துப்போனோம்
உணர்வுகள் மரத்துப்போனோம்
மூன்றாண்டு முடிந்து விடினும்
முழுவதுமே உங்கள் நினைவு

**தாய், தகப்பன், பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்.**

[14262]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வீரசிங்கம் இராசசங்கரி

(தென்மராட்சி பிரசைகள் குழுத் தலைவரும் சட்டத்தரணிகள் சங்கச் செயலாளரும்)

அன்னையின் மடியில்:
09 - 05 - 1931

அன்னியர் அழிப்பில்:
26 - 10 - 1988

உண்மைகளை நேசித்ததனால்
உண்மைகளுக்கே
சாட்சியானவனே.
கண்முன்னே உன்னைப் பொய்யாக்கி விட்டாயே!
அதனால் புதிய மெய்கள் பயிராக
மூலவேர் ஆனாயோ?
பிரசைகள் குழுத்தலைவா
சரியைப் புரிந்ததனால்
சரிக்கட்டப்பட்ட இராசசங்கரியே
மக்கள் ஒன்றியத்தின்
மாண்புமிகு தலைவா
சட்டத்தரணிகள் சங்கச்
செயலாளனாயிருந்த சட்டத்தரணி
தென்மராட்சி மக்களுக்குச்
சேவை புரிந்தவளே
தென்மராட்சியில் கலந்தவனே
உன் ஆன்மா சாந்தியடைக

**மனைவி, உறவினர்கள், பொதுமக்கள்.**

[14535]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சிறியது அல்ல

மட்டக்களப்பில் இயங்கிய மக்கள் வங்கியின் பிராந்தியத் தலைமை அலுவலகம் துண்டாடப்பட்டுள்ளது இதன் விளைவு: மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழர்கள் விவசாயம் மற்றும் கைத்தொழில் கடன்களைப் பெறும் வசதியைப் பெருமளவில் இழப்பர்.

நெருக்கடியான காலங்களில், இன வன்செயல்கள் தீவிரமாக நடைபெறும் வேளைகளில் சட்டரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் தமிழர்களுக்கு மேலும் பாதகம் செய்வது ஸ்ரீலங்கா அரசுகளின் கைதேர்ந்த கலை.

1983 இல் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்ட வேளையில், அரசமைப்புக்கு ஆறாவது திருத்தச்சட்டம் கொண்டு வந்து தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைத் தடை செய்தது தொடக்கம் திருமலையில் இனமோதல்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த சமயம் அதன் பெரும் பகுதியை அனுராதபுர மாவட்டத்துடன் இணைத்தது, வெலிஓயாத் திட்டத்தை உருவாக்கி வடக்கு-கிழக்கின் நிலத்தொடரைத் துண்டித்தது வரை பல உதாரணங்கள் உள்ளன.

ஒவ்வொரு சிறிய விவகாரத்திலும் தமிழர்களுக்குக் கதவடைப்புச் செய்வதன் மூலம், அவர்களை மேலும் நசுக்கி, அடக்கி, ஒடுக்கி வைப்பதே அரசினதும் அதன் அதிகாரிகளினதும் நோக்காகவும், போக்காகவும் உள்ளன. அதிலும் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களை என்னென்ன வகைகளால் புறக்கணித்து, ஒதுக்கி வைக்க முடியுமோ அவற்றை ஒவ்வொன்றாக இனங்கண்டு அமுல் நடத்த அரசு முனைப்புடன் முன்நின்று செயற்படுவதைக் காணலாம்.

கிழக்கில் வாழும் தமிழர்களின் வசதிகளை, வாய்ப்புகளை இல்லாமற் செய்து அவர்களை அல்லற்பட வைப்பதும், சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தமிழர்களை ஒழிப்பதும் அரசாங்கத்தின் உள்நோக்கம். கிழக்கில் சிங்களவர் ஆதிக்கத்தை மேலோங்கச் செய்வதற்காக, தமிழர்களின் சனத்தொகையைக் குறைத்துவிடுதல் என்பது அந்த உள்நோக்கத்தின் அந்தரங்கம். கிழக்கு மாகாணத்தைத் தமிழர்கள் தமது தாயகம் என்று உரிமை கொண்டாட இடம் வைக்காமல் செய்வது என்பதே அந்த அந்தரங்கத்தின் உள்ளார்த்தம்.

அரசாங்கத்தினர், பேரினவாதத் தீவிரவாதிகளான புத்திஜீவிகள், அதிகாரிகள் என்று முத்தரப்பாரும் ஒருவருக்கு மற்றவர் அனுசரணையாகவும், தத்தமது வழிகளில் தனித்தும் கூட்டாகவும், கிழக்கையும் ஒரு சிங்கள மாகாணமாக்கத் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர். அந்த நீண்ட காலத் திட்டங்களில் சில வெளிப்படையாகவும், பல திரைமறைவிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மட்டக்களப்பு மக்கள் வங்கி மாற்றம் போன்றவை வெளியில் சிறிய பிரச்சினையாகத் தென்பட்டாலும், அது போன்றவையே கிழக்கைச் சிங்களவர் மயமாக்கும் பெரும் ஆபத்து நிறைந்த, அடாத்துமிகுந்த ஆரம்பப் புள்ளிகள்

எனவே இவை குறித்துத் தமிழர்கள் மிகவும் விழிப்பாக இருந்து, அரசின் அநியாயத்தை அம்பலத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

# உயிரிழந்தோர் - ஊனமுற்றோருக்கு நீண்டகால நிவாரண உதவிகள்

## யாழ். செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும்

யாழ்ப்பாணம், அக். 26

அண்மைக்கால வன்செயல்களில் உயிரிழந்தோர் மற்றும் உடல் ஊனமுற்றோர்களின் குடும்பங்களுக்கு யாழ் செஞ்சிலுவைச் சங்கம் நீண்டகால நிவாரண உதவிகளை வழங்கவுள்ளது.

இந்த உதவிகளின் முதற்கட்டமாக இழப்புக்களைக் கொண்ட குடும்பங்களுக்கு சுமார் 600 ரூபா பெறுமதியான உடுபுடைவைகளை வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது

பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களைச் சேகரிக்கும் பணியில் செஞ்சிலுவைச்சங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்தில் வழங்கப்படும் படிவத்தைப்பெற்று பெயர்களைப் பதிவு செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இறப்பு நிகழ்ந்திருந்தால் அதனை நிரூபிக்கும் அத்தாட்சிப்பத்திரத்தையும் - உடல் ஊனமுற்றிருந்தால் அதனை உறுதிப்படுத்தும் வைத்திய சான்றிதழையும் மற்றும் பகுதி கிராமசேவை அலுவலரின் அத்தாட்சிப்பத்திரத்தையும் இணைக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ - 5)

## கடற்சிற்றத்தின் மத்தியிலும் தமிழகத்துக்கு அகதிகள்

கடற் கொந்தளிப்பு மற்றும் சீற்றத்தின் மத்தியிலும் இலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்திற்குத் தினமும் செல்கின்றனர் என்று அங்கிருந்து ஏ. எப். பி. செய்தியாளர் பகவான் சிங் அறிவித்திருக்கிறார்

யாழ். குடாநாட்டில் விமானக் குண்டு வீச்சில் இருந்து தப்புவதற்காகவே அகதிகள் மீண்டும் தமிழகம் வரத் தொடங்கியிருப்பதாகவும் ஏ எப். பி. செய்தியாளர் அறிவித்தார். (ஒ எ)

## சுன்னாகம் - தெல்லிப்பழை அகதிகள் நவாலியில் தஞ்சம்

நவாலி, அச். 26

சுன்னாகம் தெல்லிப்பழைப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 160 குடும்பங்களைச் சேர்ந்த 670 பேர் நவாலியில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

நவாலி சிற்றூரவையினர் இவர்களில் 70 குடும்பங்களைச்சேர்ந்த 299 பேரை நாவாலி அரசடி மகாவித்தியாலயத்திலும், 58 குடும்பங்களைச் சேர்ந்த 228 பேரை நவாலி அட்டகிரி பாடசாலையிலும் தங்கவைத்துள்ளனர்.

மேலும் 34 குடும்பங்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு தற்பொழுது தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மா, சீனி, லக்ஸ்பிறேபோன்றவற்றை வழங்கியுள்ளது. (இ - 100)

## உணவு விநியோகம் பற்றிய கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 26

உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்- செயலகத்தில் நடைபெறும்.

உதவி அரசாங்க அதிபர்களும், சகல திணைக்களத் தலைவர்களும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ - 3)

## சனசமூக நிலைய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். அக். 26

சனசமூக நிலையங்களின் புனரமைப்பு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி அளவில் நடைபெறவுள்ளது.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தலைமையில் நடைபெறும். மேற்படி கலந்துரையாடலுக்கு சனசமூக நிலையங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர், (இ-6)

## பதிவுக்கு இன்று இறுதிநாள்

யாழ்ப்பாணம், அக். 26

கொட்டடி, நாவாந்துறை தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் 4ஆம் கட்ட நிவாரணத்துக்கான பதிவுகளை மேற்கொள்ளும் இறுதிநாள் இன்று வெள்ளிக்கிழமை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சேதமடைந்த கட்டடங்கள், வீடுகள் சம்பந்தப்பட்ட மதிப்பீடுகளும் இன்று மேற்கொள்ளப்பட இருப்பதாகவும். பாதிக்கப்பட்டவர்கள் தமது இருப்பிடங்களில் இருக்குமாறும் கிராம சேவையாளர் திரு. மகாலிங்கம் கேட்டுள்ளார், (இ-3)

## பொம்மர் தாக்குதலின்போது விஷமிகள் கைவரிசை

யாழ்ப்பாணம், அக். 26

எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம் என்ற தோரணையில் சாவகச்சேரிச் சந்தையில் சில விஷமிகள் நடந்துகொண்டனர்!

சந்தைப்பகுதிமீது புதனன்று பொம்மர்கள் தாக்குதல்கள் நடத்த வானில் வட்டமிட்ட சமயம் அப்பகுதியில் நின்ற அனேகர் பதுங்குகுழிகளுக்குள்ளும் மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கும் ஓடிச் சென்று பதுங்கிக்கொண்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட சில விஷமிகள் வீதியோரங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களின் பொருள்களைச் சுருட்டிக் கொண்டு மாயமாய் மறைந்துவிட்டனர்.

வியாபாரிகளின் நிறுவைத் தராசுகள்கூட மிஞ்சவில்லை. அவற்றையும் அபகரித்துச் சென்றுவிட்டனர் அந்த விஷமிகள்.

குண்டு வீச்சின் போது சைக்கிள்கள் சேதமானதால் அவற்றை அங்கேயேகைவிட்டு தமது பொருள்களையும் பறிகொடுத்த வேதனையுடன் சில வியாபாரிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். (ஒ-5)

## கோப்பாய் வெளிப் பகுதியில் 33 கே.வி. மின் கேபிள் சேதம்

யாழ்ப்பாணம், அக். 26

கிளிநொச்சியில் இருந்து யாழ்-மாவட்டத்துக்கு மின்சாரம் வழங்கும் 33 கே. வி. மின் இணைப்புக் கேபிள்களில் ஒன்று கோப்பாய் வெளியில் சேதமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் இரண்டு மின் கோபுரங்களும் சேதமுற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேதமேற்பட்டுள்ள பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் திருத்த வேலைகள் மேற்கொள்ள முடியாது இருப்பதாகவும்-

இந்த சேதங்களினால் மின் விநியோகம் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## திருமலையில் தேடுதல்

திருகோணமலை, அக் 26

திருகோணமலை நகரின் பிரதான பகுதிகள் கடந்த வாரம் பொலீசாரினால் திடீரென சுற்றி வளைக்கப்பட்டன அங்கு தீவிர தேடுதல் வேட்டை நடந்தது.

விசாரணைக்கு என பலர் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது. (உ 6)

## ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி புளியங்கூடலில் இயங்குகிறது

புளியங்கூடல், அக் 26

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி புளியங்கூடல் நெசவு நிலையக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது.

இராணுவம் நிலைகொண்டிருப்பதால் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி இயங்க முடியாத நிலையில் இருப்பது தெரிந்ததே.

வார்ட், கட்டில் வசதிகள் இல்லாததாலும் வைத்தியசாலை ஊழியர் வரவு குறைவாக இருப்பதாலும் தற்போது வெளி நோயாளருக்கான மருத்துவ வசதிகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன. (இ - ரி)

## தாவடியில் ஆரம்ப சுகாதார நிலையம்

யாழ்ப்பாணம், அக். 26

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் இன்று வெள்ளிக்கிழமை முதல் தற்காலிகமாகத் தாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கும் (இ - 5)

## மருத்துவபீட மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், அக் 26

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கான அவசரப் பொதுக்கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மருத்துவபீடத்தில் இடம்பெறும் (இ)

## கொட்டடியில் விஷக்கடி வைத்தியர்

யாழ்ப்பாணம், அக். 26

பிரபல விஷக்கடி வைத்தியர் திரு க. சிற்றம்பலம் மீண்டும் யாழ்ப்பாணம் கொட்டடியில் — பழைய இடத்திலேயே தமது சேவையைத் தொடங்கியுள்ளார். (ஒ - 6)

## கிளிநொச்சியில் தேங்காய் விலை திடீர்வீழ்ச்சி

கிளிநொச்சியில் தேங்காய் விலை 4 ரூபாவாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

தென்பகுதியில் இருந்து தேங்காய் இங்கு வரத் தொடங்கி இருப்பதும்-

கொம்படி பாதையூடாக யாழ். குடாநாட்டுக்கு தேங்காய் கொண்டு செல்லப்படுவது மழைகாரணமாக தடைப்பட்டிருப்பதுமே கிளிநொச்சியில் தேங்காய்விலை வீழ்ச்சி அடையக்காரணம் ஆகும்.

சில நாட்களுக்கு முன் தேங்காய் 8 ரூபா வரை விற்கப்பட்டது. (இ-76)

## கல்லுண்டாய் வயல்களில் மாடுகளினால் பயிர் அழிப்பு

கல்லுண்டாய் பகுதி நெற்பயிர்களைக் கட்டாக்காலி மாடுகள் அழித்து வருகின்றன.

நெருக்கடியான இக்கால கட்டத்தில் பல்வேறு சிரமங்கள் மத்தியில் தாம் நெல்லை விதைத்துவிட இரவு வேளைகளில் வயல்களுக்குள் புகுந்து மாடுகள் அழிக்கின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது பற்றி நவாலி சிற்றூர் அவையிடம் அப்பகுதி விவசாயிகள் முறையிட்டுள்ளனர். (இ - 100)

# இராணுவம் கைப்பற்றிய வாகனங்கள்; பொதுமக்களுக்கு பலலட்சம் நஷ்டம்

மண்டைதீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது பொதுமக்களிடமிருந்து படையினரால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் இன்னும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. இதனால் பொதுமக்களுக்குப் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

மண்டைதீவில் கைப்பற்றப்பட்ட வாகனங்களில் மூன்று மினி பஸ்கள், ஒரு லொறி, ஒரு உழவு இயந்திரம், 10க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள் ஆகியவற்றை படையினர் ஊர்காவற்றுறைக்கு வாபஸாகிய சமயம் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

தற்போது இந்த வாகனங்கள் ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள படையினரால் பயன்படுத்தப்பட்டுவருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது வாகனங்களை மீட்டுத்தரும்படி வாகன உரிமையாளர்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திச் சாரம்

### நாளை முதல் ஆராதனை

குருநகர், அக். 26

குருநகர் காணிக்கை மாதா (புதுமை மாதா) ஆலயத்தில் நாளை முதல் ஆராதனைகள் நடைபெறும் என பங்குத் தந்தை வண. பி,எம். இம்மனுவேல் அடிகளார் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கை காரணமாக ஆலயத்துக்கு சுமார் 8 லட்சம் ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது (ஒ-51)

### வங்கிகளில் அதிகளவு வாடிக்கையாளர்

யாழ்ப்பாணம், அக் 26

யாழ்நகரவங்கிகளில் நேற்று வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது.

வாடிக்கையாளர்கள் நீண்ட 'கியூ'வில் நின்று தமது அலுவல்களைக் கவனித்துச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

வங்கிகளில் கொடுக்கல். வாங்கல் அலுவல்கள் கணிசமான அளவில் நடைபெற்றன. (ஒ-6)

### 2 ஆம்தர அதிபர் நியமன கடிதங்கள்

யாழ்ப்பாணம், அக் 26

யாழ் - மாவட்டத்தில் இரண்டாம் தர அதிபர்களாகப் பணிபுரிவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 93 பேருக்கும் எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ் - கல்வி அலுவலகத்தில் வைத்து நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

நேரில் வராதவர்களின் நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்படும் (இ-3)

### பங்காரப்பா மீது நம்பிக்கை

பெங்களூர், அக். 26

கர்நாடக மாநில சட்டசபையில் புதிய முதலமைச்சர் திரு. பங்காரப்பா சமர்ப்பித்த நம்பிக்கை கோரும் தீர்மானம் வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டது. (உ-எ)

### ஜெய்ப்பூரில் 18 பேர் பலி

புதுடில்லி, அக். 26

பாரதிய ஜனதாக் கட்சி நேற்று முன்தினம் (புதன்) நடத்திய ஹர்த்தாலின் போது ராஜஸ்தான் மாநிலத் தலைநகர் ஜெய்ப்பூரில் இடம்பெற்ற வன்செயல்களில் மட்டும் 18 பேர் கொல்லப்பட்டனர். [ஒ-எ]

### பரீட்சைக் கட்டணத்தை செலுத்தலாம்

ஸ்ரீலங்கா நிர்வாக சேவையின் இரண்டாம் தரத்தின் இரண்டாம் வகுப்புக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் அதற்குரிய கட்டணத்தை யாழ் - செயலக சிறாப்பர் பிரிவில் செலுத்தி, பற்றுச் சீட்டைப் பெறலாம். மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. சண்முகநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

விண்ணப்பப் படிவ மாதிரியையும் விவரங்களையும் செயலகத்தில் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பரீட்சைக்கு விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதித்திகதி இம்மாதம் 31 ஆம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3)

### இயந்திர இறக்குமதிக்கு தடை

15 குதிரைச் சக்திக்கு அதிகமான வேகம் கொண்ட 'அவுட் போட்' இயந்திரங்கள் இறக்குமதியையும், விற்பனையையும் தடைசெய்வது என்று அமைச்சரவை தீர்மானித்து உள்ளது.

இத் தடைக்கு முரணாக இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## மரண அறிவித்தல்

திருமதி

### மங்கையற்கரசி சுந்தரம்பிள்ளை

[அதிபர்-கமு/அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயம்]

காரைதீவைப் பிறப்பிடமாகவும் அட்டப்பள்ளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி சுந்தரம்பிள்ளை 26 - 09 - 90 அன்று அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. சுந்தரம்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்)யின் அன்பு மனைவியும், சுகுமார் (லண்டன்), விஜயகுமார் (இ.போ.ச, திருகோணமலை), சிவகுமார் (சுஜீடா ட்ரவல்ஸ்) காலஞ்சென்ற கலைக்குமார், ஜெயக்குமார் (நோர்வே), உதயகுமார் (இந்தியா). செல்வி, இசையரசி ஆகியோரின் அன்புத் தாயாரும், றோகினி (லண்டன்), பாரதிதேவி (உ.அ.அ. காரியாலயம், காரைதீவு), சாந்தினி, ஸ்ரீவித்யா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், சித்திரவேல் (அதிபர்), மகாலிங்கம், பாலசந்தர் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விவேகானந்தராசா, சதாசிவம் (ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி), கணேசன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்), திருமதி கோமேதகவல்லி (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27-09-90 வியாழக்கிழமை அன்னாரின் அட்டப்பள்ளம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அட்டப்பள்ளம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

தகவல்:

திரு. பூ. விவேகானந்தராசா.

அட்டப்பள்ளம்,
நிந்தாவூர்.

(14516)

## வயாவிளான், கட்டுவனில் படை வெளியேற முயற்சி

யாழ்ப்பாணம், அக். 26

நேற்று வயாவிளான், கட்டுவன், மாவிட்டபுரம் பகுதிகளில் வெளியேறுவதற்குப் படையினர் எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. புலிகள் நடத்திய கடும் தாக்குதல்களினால் அவர்கள் பின்வாங்கிச் சென்றனர்.

அதிகாலை 3 30 மணியளவில் கட்டுவன் முகாமில் இருந்து முன்னேற முயன்ற படையினர் புலிகளின் தாக்குதல்களை அடுத்து இழப்புகளுடன் முகாம் திரும்பினர்.

நேற்றுப்பகல் 12 30 மணியளவில் வயாவிளான் முகாமில் இருந்து குரும்பசிட்டிப் பக்கமாக முன்னேற முயன்ற படையினருடன் புலிகள் கடுமையாக மோதினர்.

அதேவேளை—

மாவிட்டபுரம் முகாமில் இருந்து அரசடிப் பக்கமாகவும்-

மாவிட்டபுரம் குவாறிப் பக்கத்தில் இருந்து தச்சங்காட்டு சுடலை வைரவர் ஆலயம் நோக்கியும்-

காங்கேசன்துறை முகாமில் இருந்து கீரிமலை கிருஷ்ணர் ஆலயப் பகுதியை நோக்கியும் — படையினர் முன்னேற பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களால் அவர்கள் பின்வாங்கிச் சென்றனர். (அ-3.5.68)

## குஜராத், ராஜஸ்தான் மாநில அரசுகளும் கவிழும்?

புதுடில்லி, அக். 26

குஜராத்தில் உள்ள ஜனதாதள் மாநில அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்வதாக பாரதிய ஜனதா கட்சியும்—

ராஜஸ்தானில் உள்ள பாரதிய ஜனதா கட்சியின் மாநில அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை விலக்கிக் கொள்வது என்று ஜனதாதள் கட்சியும் நேற்று முடிவு செய்தன.

இதனையடுத்து இரு இடங்களிலும் மாநில அரசுகள் கவிழும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஒ)

### பிரதமர்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வெளியான செய்தி தவறு என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறப்புக் கூட்டத்தில் தமது கட்சி எம். பிக்களும் கலந்து கொண்டு வி. பி. சிங் அரசுக்கு எதிராக வாக்களிப்பர் என பாரதிய ஜனதாக் கட்சி அறிவித்திருப்பது தெரிந்ததே.

இந்திரா காங்கிரஸ், பாரதிய ஜனதா ஆகிய இரு கட்சிகளினதும் எம். பிக்கள் எண்ணிக்கை இந்திய நாடாளுமன்றத்தில் அரைவாசிக்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

### பாகிஸ்தான்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லட்கார்னா தொகுதியில் மட்டும் வெற்றியீட்டினார். மற்றத் தொகுதியில் தோல்வி அடைந்தார்.

இரண்டு தொகுதிகளில் போட்டியிட்ட பெனாஸிரின் கணவர் ஆஸிப் அலி சர்தாரும் ஒரு தொகுதியில் வெற்றி பெற்றார்.

இஸ்லாமிய ஜனநாயக அணியின் தலைவர் நவாஸ் ஷரிப், போட்டியிட்ட இரண்டு தொகுதிகளிலும்வெற்றியீட்டினார்.

எல்லைக்காந்தி அப்துல் கபார்கானின் புதல்வர் வலிகான், முன்னாள் விமானப் படைத் தளபதி அஸ்காகான் ஆகியோர் தோல்வியடைந்தனர். (உ-எ)

### அத்தியாவசிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் மேலும் மந்தமடையும் நிலை தோன்றி உள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான தேவைகளை யாழ் - அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இதுவரையும் ஐ நா அகதிகள்ஸ்தானிகராலயவானொலித் தொடர்பு சாதனம் மூலமாகவாய் மூலத் தகவலாகஅறிவித்து வந்தார்.

அந்த வகையில் அரச அதிபர் நேற்றுக் கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவை நாயகம்திரு சரித்தரத்வத்தையுடன் வானொலி மூலம் தொடர்பு கொண்டு சில தேவைகளைத் தெரிவித்தார்.

அப்போதே இனிமேல் தேவைகள் சம்பந்தமான [illegible] மூலம் அனுப்பிவைக்குமாறு கூறப்பட்டது [அ-3]

### 6 சிப்பாய்கள் கால் இழப்பு

யாழ்ப்பாணம், அக். 26

கடந்த சனிக்கிழமை முதல் புதன்கிழமை வரை கிழக்கில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவங்களில் ஆறு சிப்பாய்கள் தமது கால்களை இழந்தனர்.

விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

அம்பாறை மாவட்டம் கஞ்சிக்குடியாற்றில் கடந்த சனியன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாகவும்—

அந்தச் சண்டையின்போது இரு சிப்பாய்கள் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தில் கடந்த செவ்வாயன்று ஒரு சிப்பாய் காலை இழந்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் சந்திவெளியில் கடந்த சனியன்று ஒரு சிப்பாயும் —

புதன் சித்தாண்டி, கோறாவெளி ஆகிய இடங்களில் ஒவ்வொரு சிப்பாயும் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பாக். தேர்தல் முடிவுகள்

இஸ்லாமாபாத், அக். 26

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை பாகிஸ்தான் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்களின் நிலை வருமாறு:-

| | | |
|---|---|---|
| மொத்த ஆசனங்கள் | — | 217 |
| தேர்தல் நடைபெற்றவை | — | 216 |
| முடிவுகள் தெரிந்தவை | — | 206 |
| இஸ்லாமிய ஜனநாயக அணி | — | 105 |
| பாகிஸ்தான் மக்கள் கட்சி (பெனாஸிர் பூட்டோவின் கட்சி) | — | 45 |
| ஏனைய கட்சிகளும், சுயேச்சைகளும் | — | 56 |

(உ)

### போர் நிதி திரட்ட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அது இதுவரை ஆயிரத்து 500 கோடி ரூபாவுக்கு உயர்ந்து விட்டது.

1991 ஆம் ஆண்டிலும் பாதுகாப்புச் செலவு ஆயிரத்து 100 கோடி ரூபா முதல் ஆயிரத்து 600 கோடி ரூபாவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது

நவீன ஆயுதங்கள், விமானங்கள் என்பவற்றை வாங்குவதாலேயே செலவினம் அதிகரிப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் மூலம் அறியப்படுகிறது.

இதேவேளை, இலங்கையின் நிதிவளம் மிகமிக வற்றி வரண்டு போய்விட்டதாக நிதித்துறை ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார். வங்கிகளுக்கிடையிலான வட்டி 14 சதவீதத்துக்கு வந்துவிட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

''நிதிவளத்தை விருத்தி செய்வது என்பது கஷ்டமான காரியமாக இருக்கிறது. மத்திய கிழக்குப் பணம் குறைந்துவிட்டது; தேயிலை மூலமான வருமானமும் வீழ்ச்சி கண்டுள்ளது; இதேவேளை எரிபொருள் விலை உயர்ந்துள்ளது

தற்போதைய பின்னணியில் யுத்தம் மேலும் பல மாதங்களுக்கு நீடிக்கும் போலத் தெரிகிறது. இலங்கைக்குப் பெரிய கஷ்டம் தான்'' —என்று அந்த ஆய்வாளர் தெரிவித்தார். (அ)

### ஸியா மகன் வெற்றி

விமானவிபத்தில் பலியான பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியா-உல்-ஹக்கின் புதல்வர், நடந்து முடிந்த பாகிஸ்தான் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிட்ட இரண்டு தொகுதிகளிலும் வெற்றியீட்டினார். (ஒ-எ)

### யாழ். போதனா.,

நடைபெற்றன.

அனேகமாக இன்னும் இரண்டு அல்லது மூன்று தினங்களில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திறக்கப்படலாம் என வைத்திய வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. [அ-5-3]

## மரண அறிவித்தல்

### அருளம்பலம் கந்தையா

[கணக்கப்பிள்ளை]

நயினாதீவு அருளம்பலம் கந்தையா (கணக்கப்பிள்ளை) 25-10-90இல் காலமானார். அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், வனிதாவின் அன்புத் தந்தையும், தவலிங்கத்தின் அன்பு மாமனாரும், கனகம்மா, சவுந்தரம், சிவபாக்கியம், தம்பிமுத்து பரமலிங்கம், பேரம்பலம், செல்லம்மா, சண்முகநாதன் ஆகியோரின் சகோதரரும், வீரவாகு. சிவக்கொழுந்து, நடராசா, கந்தசாமி, சுந்தரம்பிள்ளை, இரத்தினசபாபதி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், துர்ஜா, துசாந், நர்மதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 26-10 90 இன்று மாலை 4 மணிக்கு நயினாதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:

நா. தவலிங்கம்
(மருமகன்)

(14266)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 29?2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26 - 10 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org